RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2522

# இலக்கியங்கள் கூறும் வங்கியம்

பா. நளினிப்ரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்- 641043, தமிழ்நாடு, இந்தியா

# Vankyam in Literature

P. Nalinipriya [a, *]

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science & Higher Education for Women, Coimbatore- 641043, Tamil Nadu, India

* Corresponding Author: nalinipriya_tam@avinuty.ac.in

Received: 12-08-2022
Revised: 20-10-2022
Accepted: 05-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

In ancient times, when man gave importance to food, shelter and clothing, making musical instruments was one of the things he did for his mental happiness and entertainment. Among them the best and most widely used musical instrument among the percussion instruments is the pipe instrument called Vankyam. We can know through the Sangam literature that man used it in the early days with a few holes, and later he increased the fields and played all the seven tunes and ragas. The purpose of this article is to analyze the way in which the literature speaks about the use of musical instrument in them.

**Keywords:** Sangam Literature, Vankyam, Musical Instrument, Pipe Instrument

## முன்னுரை

இன்றை அறிவியல் உலக காலங்களிலும் வங்கியம் என்னும் குழலிசைக் கருவி மறைந்துவிடாமல் பயன்பாட்டில் இருந்துவருவது மக்களிடையே இசை ஆர்வம் அதிகமாகியுள்ளதை காணமுடிகின்றது. இவ்வங்கிய இசை தமிழிசையில் மட்டுமல்லாது மேற்கத்திய இசையிலும் பயன்பாட்டில் உள்ளது. சங்க கால மக்கள் வங்கியத்தை எம்முறையில், எவ்வகையில், எச்சூழலில் பயன்படுத்தினார்கள் என்பதை இலக்கியங்கள் வாயிலாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வங்கியம் விளக்கம்

வங்கியம் என்றால் குழல் என்பதாகும். குழல் மிகவும் தொன்மையான இசைக் கருவிகளுள் ஒன்று. புல்லாங்குழல் என்றாலும் வேணு என்றாலும் குழலையேக் குறிக்கின்றது. புல், வேணு என்பதற்கு மூங்கில் என்ற பொருள் உண்டு. பழங்காலத்தில் மூங்கில்களால் செய்யப்பட்ட கருவியாகையால் இதற்கு புல்லாங்குழல் என்ற பெயர் உருவாயிற்று. காடுகளில் வளர்ந்த மூங்கில் புதர்களில் சில மூங்கில் குழாய்களை வண்டுகள் துளையிட்டு ஓட்டைகளை உருவாக்கின. காற்று வேகமாக வீசும் போது அந்தத் துளைகளின் வழியாக உள்ளே சென்று விசையோடு வெளிப்பட்டபோது அந்தக் குழாயிலிருந்து இனிமையான ஓசை உண்டானது. அதைக் கேட்டு அதிசயித்துப் போன அக்கால மக்கள் அந்த மூங்கில் குழாயை ஆராய்ந்து பார்த்து,

அக்குழாயில் துளைகள் இருப்பதை அறிந்து அதைப் போலவே குழலை உண்டாக்கினர். பின்னர் அதனை மேலும் மேலும் மெருகூட்டி சீர்படுத்தி இசைக் கருவியாக உருவாக்கினார்கள். அதற்கு பிறகு இக்கருவி சந்தனம், கருங்காலி, செங்காலி போன்ற மரங்களினாலும் வெண்கலத்தினாலும் வங்கியத்தை உண்டாக்கினர்.

“ஓங்கிய மூங்கில் உயர்சந்து வெண்கலமே

பாங்குறுசெங் காலி கருங்காலி - பூங்குழாய்

கண்ணன் உவந்த கழைக்கிவை களாமென்றார்

பண்ணமைந்த நூல்வல்லோர் பார்த்து”

என்று சீவக சிந்தாமணி இயம்புகின்றது (Ram Suresh, 2009). இவற்றுள் மூங்கில் உயர்தரமாகவும் வெண்கலம் நடுத்தரமாகவும் மற்றவை கீழ்த்தரமாகவும் கொள்ளப்பட்டது. பழைய வில்யாழ் மறைந்துவிட்டது போலப் புல்லாங்குழல் மறைந்துவிடாமல் இன்றளவும் நிலைப்பெற்றிருக்கின்றது. இவ்வாறு உருவாக்கிய குழலாகிய வங்கியத்தை வாசித்த இசைக் கலைஞன் குழலோன் என்றும் வங்கியத்தான் என்றும் அழைக்கப்பட்டான்.

## வங்கிய இலக்கணம்

வங்கியத்தின் நீளம் 20 விரல் அளவு. இதில் தூம்பு முகத்தின் இரண்டு விரல் நீக்கி முதல்வாய் விட்டு அம்முதல் வாய்க்கு ஏழங்குலம் விட்டு வளைவாயினும் இரண்டு விரல் நீக்கி நடுவில் நின்ற ஒன்பது விரலினும் எட்டுத் துளையிட வேண்டும். இவற்றுள் ஒன்று முத்திரை என்று கழித்து விட்டு நீக்கி மீதம் நின்ற ஏழினும் ஏழுவிரல் வைத்து ஊதப்பட வேண்டும். துளைகளின் பரப்பு ஒரு விரல் அகலம் என்று கொள்ள வேண்டும். இதனை

“இருவிரல்க ணீக்கி முதல்வா யேழ்நீக்கி

மருவு துளையெட்டு மன்னும் - பெருவிரல்கள்

நாலங்சு கொள்க பரப்பென்ப நன்னுதலாய்

கோலஞ்செய் வங்கியத்தின் கூறு”

என்கின்றது சிலப்பதிகாரம் (Jeyalakshmi, 2000). மேலும் வங்கியத்தை இசைக்கும் ஆசிரியோனது வரன்முறைகளை சிலப்பதிகாரம் எடுத்துக் கூறியுள்ளது.

## இலக்கியங்களில் வங்கியம் (குழல்)

குழல் என்றதுமே குறிஞ்சித் திணையே நினைவுக்கு வருமளவுக்கு சங்க நூல் இதற்கு சான்றாகின்றன. ஏழு உயிர்ச் சுரத் துளைகளுள்ள குழற் கருவிகளான மகுடி, புல்லாங்குழல், நாதசுரம் ஆகியவை உயிரினங்களை மயங்கச் செய்யும் ஒலிகளைக் கொண்டன. அவைகள் தனித்தியங்கும் தன்மையும் சிறப்புகளையும் கொண்டன.

“யாழும் குழலும் சீருமிடறும்

தாழ்குரல் தண்ணுமை

குழல்வழி நின்றது யாழே

யாழ்வழித் தண்ணுமை நின்றது”

என்று சிறப்பிக்கிறார் இளங்கோவடிகள் (Jeyalakshmi, 2000).

தாளங்கொட்டும் கருவிகளை வாச்சியம் என்று அழைப்பது போல ஊதுகுழல் கருவிகளை வங்கியம் என்று அழைப்பதுண்டு.

குறிஞ்சித் தமிழர் புல்லாங்குழலுக்குத் துளையிட்டதையும் அதனை இசைத்தமை பற்றியும் பெரும்பாணாற்றுப்படை இயம்புகிறது (Rasamanikam, 1947).

"புகை கமழக் கைமுயன்று

ஞெலி தோற் கொண்ட பெருவிறல் நெகிழச்

செந்தீத் தொட்ட கருத்துளைக் குழல்"

என்றும்

"மரற்புரி நரம்பின் வில்யாழ் இசைக்கும்

விரலொளி குறிஞ்சி"

என்றும் கூறப்பட்டுள்ளது (Rasamanikam, 1947).

## குழலின் வகைகள்

இலக்கியங்களில் வங்கியமான குழல்களின் பதிவுகள் மட்டுமல்லாது அதன் வகைகள் குறித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன. ஆம்பல்குழல், கொன்றைக்குழல் எனும் இருவகைக் குழல்கள் பற்றி பதிவாகியுள்ளன.

### ஆம்பல்குழல் வகை

ஆம்பல் குழல் என்பது குழலிசை கருவிகளில் ஒரு வகையாகக் கருதப்பட்டது. மூங்கிலையும் ஆம்பல் என்று சொல்வதுண்டு. ஆதலால் ஆம்பல் என்பது மூங்கிலால் செய்த குழல் என்றும் ஆம்பல்மலரின் தண்டில் செய்த குழல் என்றும் குறிக்கப்படுகின்றது. ஆம்பல் பண்ணை இசைத்த குழலை ஆம்பல் குழல் எனவும் இலக்கியங்களில் பதிவாகியுள்ளது.

"நீவளர் ஆம்பல் தூம்புடைத் திரள் கால்"

என்ற நற்றிணை பாடலடி ஆம்பல் தண்டு நடுவே துளையுடையது என்று எடுத்தியம்புவதிலிருந்து ஆம்பல் குழலிசைக் கருவி என்பதை தெளிவுபடுத்துகிறது (Rasamanikam, 1947).

"ஆம்பல் அம் குழலின் ஏங்கி"

என்னும் பாடலடி தலைவன் தலைவியை நினைந்து கூறும் கூற்றில் போர்க்களத்தில் குழல் ஊதுவோர் ஆம்பல் குழல் (ஆம்பல் தண்டில் செய்த குழல்) ஊதினர். அந்த ஊதல் ஒலி போல தேம்பி புலம்பும் முகம் நினைவிற்கு வந்துகொண்டே இருக்கின்றது என்று அமைந்துள்ளது. இதில் தலைவியின் மென்மையான குரலொலிக்கு இணையாக குழலொலி கூறப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

"ஆபெயர் கோவலர் ஆம்பலொடு அளைஇ" (Rasamanikam, 1947)

என்ற அகநானூற்று பாடலடியில் மாலைவேளையில் கோவலர்கள் பசுக்களை மேய்த்து அவற்றை ஒன்று கூட்டி தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச் செல்லும் போது புல்லாங்குழல் இசைத்துக் கொண்டு செல்வர் என்றும்,

"தீங்குழல் ஆம்பலின் இனிய இமிரும்" (Rasamanikam, 1947)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலடி வண்டின் இசை ஆம்பற் குழலைக் காட்டிலும் இனியது என்றும் கூறுமிடத்து ஆம்பல் குழலிலிருந்து எழும்பும் ஓசை இனிமையுடையது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

"ஆம்பற் குழலால் பயிர்பயிர் - எம்படப்பைக்

காஞ்சிக்கீழ்ச் செய்தேம் குறி”

என்னும் கலித்தொகை பாடலடிகளில் இரவுக்குறி வருகையை எதிர்நோக்கும் தலைவி தலைவனிடம் தான் வரும்போது யாரும் அறியாமல் ஆம்பல் குழலை இசைத்து குறி செய்து வருக என்று கூறும் இடத்து ஆம்பற் குழல் பயன்படுத்தப்பட்டுள்ளது (Rasamanikam, 1947).

## கொன்றைக் குழல்

கொன்றைக் குழல் எனப்படுவது கொன்றைக்காய்களை குடைந்து துளையிட்டு செய்யும் குழலிசைக் கருவியாகும். சங்க கால மக்கள் கொன்றைக் குழலை மாலை நேரங்களிலும் இசைத்துள்ளனர் என்பதனை சங்க இலக்கிய பாடலடிகள் விளக்கியுள்ளன. பொதுமன்றங்களில் கொன்றைக் குழலை மாலை நேரங்களில் இசைத்துள்ளனர்.

“துய்த்த வாய, துகள் நிலம் பறக்க

கொன்றை அம்சினைக் குழற்பழம் கொழுதிச்”

“கொன்றைக் குழற்பழம்”

“நெலிகோல் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்

செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்

இன்தீம் பாலை முனையின் குமிழின்”

“ஒழுகிய கொன்றைத்தீம் குழல் முரற்சியர்”

“கொன்றை அம் தீங்குழல் மன்று தோறு இயம்ப”

இப்பாடலடிகளில் கொன்றைக்குழல் பயன்படுத்தப்பட்டுள்ளமை அறியமுடிகின்றது (Rasamanikam, 1947).

## குழலும் ஆயர்களும்

ஆயர்கள் முறைப்படி இசையைக் கற்றவரல்லர். தம் போக்கில் இயல்பாக அவருக்குத் தோன்றுவதை இசையாக இசைக்கக்கூடியவர்கள். பண்ணையும் அதன் இயல்புகளையும் தெரிந்துகொண்டு குழலிசைத்திருப்பார்கள் என்று கூறலாம். ஊருக்கு வெளியில் பெரும்பாண்மையான நோரத்தைச் செலவிட்டுள்ளனர். எனவே குழலை இசைத்துத் தமது தனிமையைப் போக்கியுள்ளனர். ஆயரைக் குழல் உடையவர் என்னும் பொருண்மையில் குழலன் என்று சுட்டுகின்றனர்.

“கோவலர் இசைக்கும் குழல் ‘தை’ என்னும் ஓசையுடையது என்பதைத்

தையெனக் கோவலர் தனிக்குழல் இசை கேட்டு”

என்னும் பாடலடி உணர்த்துகின்றது (Rasamanikam, 1947).

## குழலிசைவாணர்கள்

குழல் கோவர்களோடு தொடர்புடையதாகப் பல சான்றுகள் இருந்தாலும் சில இடங்களில் பயிற்சி பெற்ற இசைவாணர்களும் குழலை இசைத்துள்ளனர் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. வையைப் பெரு வெள்ளத்தைக் கண்டு களிக்கும் சூழலில் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று நிகழ்த்திருக்கும் சூழலில் பல்வேறு இசைக்கருவிகள் இசைக்கப்பட்டதில் குழலிசையும் ஒன்று. இதனை

"ஊது சீர்த் தீம் குழல் இயம்ப மலர்மிசை" என்ற பாடலடி குறிப்பிடுகின்றது (Rasamanikam, 1947).

## குழலிசையின் ஒப்புமை

குழலின் இசை பலவற்றின் ஒலிகளோடு ஒப்புமைக்காட்டுப்பட்டுள்ளது. குறிப்பாக மூங்கில், வண்டு, பறவை, இடி, விளாம்பழம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மூங்கிலில் வண்டுகள் துளையிட்டதினால் அத்துறைகளில் காற்று புகுந்து எழுப்பும் ஒலியைக் கேட்ட பின்னரே மூங்கிலில் குழலைச் செய்யத்தொடங்கினான். அத்தகைய மூங்கில் துளையில் எழும் காற்று ஓசை ஆயர் ஊதும் குழலுக்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது.

"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்

கோடை அவ்வரி குழலிசை ஆக"

"புதல் இவர் ஆடு அமைத்தும்பி குயின்ற

அகலா அம்துளை கோடை முகத்தலின்

நீர்இயங்கு இனநிறைப் பின்றை வார்கோல்

ஆய்க்குழல் பாணியின் ஐதுவந்து இசைக்கும்"

என்று சங்க இலக்கியத்தில் வண்டின் இமிர்தல் ஒலி மிகப் பரவலாகப் பேசப்பட்டுள்ளது. குழலோடும் வண்டு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது (Rasamanikam, 1947).

இசைக்கலைஞர்கள் இசைக்கும் ஆம்பல் குழலின் இனிய இசையைவிட பொன் உரைகல் போன்ற நீலமணியின் நிறத்தையுடைய வண்டுகள் ஒலிக்கும். இருள்நீங்க விடியல் வர, நீண்ட இலவ மரத்தினது அசையும் கிளைகளில் உள்ள தீயைப் போன்ற ஒள்ளிய மலர்களில் குழல் போன்ற இசையையுடைய வண்டுகள் ஒலிக்கும். நரம்பின் இனிதான இசையைத் தானத்தில் நிறுத்தும் குழல்போல தும்பி மலர்த்தாதில் ஊதும். இசைவாணர்கள் இசைக்கும் குழல் ஒலிபோல வண்டு ஒலிக்கும்.

ஆண் வங்காப் பறவை நீங்கப் பெற்றமையால் சிவந்த கால்களையுடைய பெண்பறவை 'புல்லூறு' என்னும் பறவை தன்மேல் விழ இறையாகக் கொள்ளும் பொருட்டுத் தம்முடைய கணவனாகிய ஆண்பறவையைக் காணாமல் வேய்ங்குழலினது இசையைப் போன்ற ஒலியை எழுப்பும். இதனை

"வங்காக் கடந்த செங்காற் பேடை

எழால்உற வீழ்ந்தெனக் கணவற் காணாது,

குழல்இசைக் குரல குறும்பல அகவும்"

என்னும் பாடலடிகள் சான்றாகின்றன (Rasamanikam, 1947).

குயில்கள் குருக்கத்தியின் இலைகள் உதிரும்படிக் கூவும். அவ்வொலி இசைவாணர்கள் இசைக்கும் குழல் ஒலிபோல இருந்துள்ளது என்பதை

"குருகு இலை உதிர குயிலினம் கூவ

பகர்குழல் பாண்டில் இயம்ப அகவுநர்"

என்ற பாடலடிகளில் பறவையை ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது (Rasamanikam, 1947).

## போர்க்களத்தில் குழலிசை

போரில் ஈடுபட்டு விழுப்புண்பட்டு நோய்வாய்ப்பட்ட கணவனைப் பேயிடமிருந்து காப்பதற்காகத் தலைவி சில சடங்குகளைச் செய்வதோடு ஆம்பலங்குழல் ஊதவும் செய்வாள்.

அதற்குக் காரணம் கணவனைக் கண்ணும் கருத்துமாய்க் காக்க அவன் உறங்காமல் இருக்க வேண்டும். இசையைக் கேட்டால் காயத்தின் வலி தெரியாமல் இருக்கும் என்பதற்காகவும் இசைக்கப்பட்டிருக்கும் என்பதை

"ஐயவி சிதறி ஆம்பல் ஊதி" (Rasamanikam, 1947)

என்ற பாடலடியில் குழலிசை மருந்தாகச் செயல்பட்டிருப்பதைப் புலப்படுத்துக்கின்றது.

## முடிவுரை

இசைக் கலைஞர்கள், திணைநிலை மக்கள் இருவராலும் குழல் இசைக்கபட்டுள்ளது. குழல் குழு இசையாகப் பிற கருவிகளுடன் இணைந்தே இசைக்கப்பட்டுள்ளது. போர்க்களம், விழாக்காலம், வெறியாட்டுக்களம் எனப் பயன்படுத்திய இடமும் பலவாறாக இருந்திருக்கின்றது. மாலை நேரத்திற்கான அறிகுறியாகவும் ஐந்திணைகளுக்கும் பொதுவானதாகவும் இருந்திருக்கின்றது. வன்மை, மென்மை என இருவகைத் தன்மைக்கும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. அன்று முதல் இன்று வரை மக்களின் வாழ்வில் பொழுதுபோக்கு மற்றும் இசை பயன்பாட்டில் பெரும்பங்கு வகிப்பது வங்கியம் எனப்படும் குழல் கருவியே. அக்குழல் கருவி பயன்படுத்தப்பட்ட காலச்சூழலும் பயன்படுத்திய முறைமையும் அக்கருவி செய்யப்பட்ட முறையினைக் கொண்டு அதன் வகைகளும் அறியப்பட்டது. மேலும் குழற்கருவியை அதிகமாக ஆயர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தமையும் ஆநிரைகள் அக்குழலிசைக்கு மயங்கியமையும் கூறப்படுதிலிருந்து மக்கள் மட்டுமல்லாது மாக்களும் இசைக்கருவியின் மூலம் வெளிப்படும் இன்னிசைக்கு செவிமடுப்பதை இலக்கியங்கள் வாயிலாக நாம் தெளிவாக அறியமுடிகிறது.

## References

Jeyalakshmi, S. (2000) Silapathikarathil Isai Selvangal, International Institute of Tamil, Chennai, India

Ram Suresh, (2009) Seevaga Sinthamani, Kizhakku Pathippagam, Salem, Tamil Nadu

Rasamanikam, R. (1947) Ettuthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License